பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை – 4

28 06 2024 **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நீட் தேர்வு முறைகேடுகள் குறித்து விவாதிக்க வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், நாடாளுமன்றத்தின் இருஅவைகளின் நடவடிக்கைகளும் இன்று பாதிப்புக்கு உள்ளாயின.

2. மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி, தமிழக சட்டப்பேரவையில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. நடப்பாண்டின் முதலாவது அமர்நாத் யாத்திரையை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா இன்று தொடங்கிவைத்தார்.

4. கர்நாடக மாநிலத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

5. சென்னையில் இன்று தொடங்கியுள்ள தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தில் நீட் தேர்வு முறைகேடுகள் குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளின் நடவடிக்கைகளும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றது குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

எதிர்க்கட்சிகளின் கடும் அமளி காரணமாக அவைத்தலைவர் திரு ஓம். பிர்லா நண்பகல் 12 மணிவரை அவையை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிகள் நீட் தேர்வு குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தி கோஷமிட்டதால், அவை நடவடிக்கைகள் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் மக்களைவ கூடியதும், எதிர்க்கட்சிகள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர்.

மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தற்போது நடைபெற்று வருகிறது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி, சட்டப்பேரவையில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுதொடர்பான தனித்தீர்மானத்தை அவையில் தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க மத்திய அரசை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்று கூறினார்.

உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம், பீகார் உள்ளிட்ட பல மாநிலங்களும் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதால், தேசிய அளவிலும் இந்த தேர்வை ரத்து செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த தனித்தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

அண்மையில் நீட் தேர்வில் பல்வேறு முறைகேடுகள் மற்றும் குளறுபடிகள் நடந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் இந்த நீட் தேர்வை எதிர்கொள்ள முடியாமல் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, ஏற்கனவே இரண்டு சட்ட மசோதாக்கள் பேரவையில் நிறைவேற்றப்பட்டதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த மசோதாக்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்காத சூழலில் இந்த தனித்தீர்மானம் கொண்டுவரப்படுவதாக திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

பின்னர் இந்த தீர்மானம் பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

<<<<<<<>>>>>>

12-ஆவது விஷ்வ இந்தி விருது பிரபல எழுத்தாளர் டாக்டர் உஷா தாக்கூருக்கு வழங்கப்படுகிறது.

இந்தி இலக்கியத்தில் சிறந்த படைப்புகளை அளித்தமைக்காக நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகம் டாக்டர் உஷா தாக்கூரை கௌரவிக்கும் வகையில் இந்த விருதை வழங்குகிறது.

40-க்கும் மேற்பட்ட நேபாள இலக்கிய படைப்புகளை அவர் இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

காட்மாண்டுவில் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் உஷா தாக்கூர், நேபாளத்தில் உள்ள சுற்றுலா பயணிகளும், உள்ளூர் மக்களும் இந்தியை அதிக அளவில் பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரனுக்கு, அம்மாநில உயர்நீதிமன்றம் ஜாமின் வழங்கியுள்ளது.

நில மோசடி மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் அமலாக்கத்துறையினரால் அவர் கைது செய்யப்பட்டு ராஞ்சி சிறையில் உள்ளார்.

<<<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சி விஷச்சாராய விவகாரத்தில் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று காலை தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவியை நேரில் சந்தித்து மனு ஒன்றை அளித்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த துயர சம்பவத்திற்கு ஆளுங்கட்சி மற்றும் அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் கூறினார்.

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தவறு நடக்க காரணமாக இருந்த அதிகாரிகள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

நடப்பாண்டின் முதலாவது அமர்நாத் யாத்திரையை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தொடங்கிவைத்தார்.

இன்று காலை ஜம்முவில் உள்ள பகவதி நகர் முகாமில் அமர்நாத் யாத்திரையை கொடியசைத்து தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அமர்நாத் யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அரசு சார்பில் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அமர்நாத் யாத்திரை இன்று தொடங்குவதையடுத்து ஆயிரக்கணக்கான யாத்ரிகர்கள் ஜம்முவில் உள்ள முகாம்களுக்கு வந்துள்ளனர்.

பஹல்காம், பல்தார் முகாம்களிலும் யாத்ரிகர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

கர்நாடகாவின் ஹவேரி மாவட்டம் குண்டனஹள்ளியில் இன்று காலை வேன் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரியின் மீது மோதியதில் 13 பேர் உயிரிழந்தனர். நான்கு பேர் காயமடைந்தனர்.

புனே – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் இந்த வேன் சென்று கொண்டிருந்தபோது, இவ்விபத்து நேரிட்டது.

உயிரிழந்தவர்கள் அம்மாநிலத்தின் ஷிவ்மோகா மாவட்டத்தை சேர்ந்த **Yemmihatti** கிராமத்தை சேர்ந்தவர்கள் என காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்த நான்கு பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காவல்துறையினர் இந்த விபத்து குறித்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, இந்த விபத்து குறித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே ஆனைமலை புலிகள் காப்பக பகுதிகளில் கோடை கால புலிகள் கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வருவது குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்கள்.

*(வாய்ஸ் பைட் - சபரிஷ் - 38 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

நாட்டின் மேற்கு கடற்கரை பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு கன மற்றும் மிக கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சௌராஷ்ட்ரா, கேரளா, கர்நாடகத்தின் தெற்கு உள் மாவட்டங்கள், தமிழகம், தெலங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களின் கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்திற்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத், கோவா, மகாராஷ்ட்ரா மாநிலங்களிலும் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நாட்டின் வட மாநிலங்களாக இமாச்சலப்பிரதேசம, உத்தராகண்ட், கிழக்கு ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் மத்திய பகுதிகளான மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், சத்தீஸ்கர், ஒடிஷா, பீகார், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் இம்மாத இறுதி வரையிலும் மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிக்கிம், அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

நெல்லை மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக, அப்பகுதிகளில் உள்ள அருவிகள் மற்றும் அணைகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக மணிமுத்தாறு அருவி பகுதியில் உள்ள மாஞ்சோலைக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு இன்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய அதிபர் திரு ஜோ பைடனும், குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் திரு டொனால்டு ட்ரம்பும், அட்லாண்டாவில் தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்றனர்.

பொருளாதாரம், குடியுரிமை, சுகாதார வசதிகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்க் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை விக்கெட் இழப்பின்றி 164 ரன் எடுத்துள்ளது.

<<<<<<<>>>>>>

தைவான் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

ஸ்பெயின் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஷா போஸ்லே – அமெரிக்காவின் **Sophie Chang** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<<>>>>>>**

அமெரிக்க ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் பிரியன்ஷூ ரஜாவத், மால்விகா பன்சோட், **Treesa Jollly – Gayathri Gopichand** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<END>>>>>>>>**